பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
07 05 2026 THURSDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதிப்பாட்டை ஆப்பரேஷன் சிந்தூர் உலகிற்கு எடுத்துரைத்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- தொழிலாளர்கள் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

- அஞ்சல் துறையை நவீனமயமாக்குவதற்கான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- பங்களாதேஷின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று சீனா அறிவித்துள்ளது.

- உலக கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா மகளிர் குழுப் பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>>>>><<<<<<<

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதிப்பாட்டை ஆப்பரேஷன் சிந்தூர் உலகிற்கு எடுத்துரைத்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஆப்பரேஷன் சிந்தூரின் முதலாம் ஆண்டு தினத்தை ஒட்டி, சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பஹல்காம் தாக்குதலுக்கு, ஆப்பரேஷன் சிந்தூர் மூலம் உரிய பதிலடி கொடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

பாதுகாப்பு படையினரின் இந்த வீரமிகு செயலுக்கு நாடே தலைவணங்குவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு படைகளின் ஒருங்கிணைப்பிற்கும், எந்தவொரு சூழலையும் எதிர்கொள்வதற்கு தயாராக உள்ளதையும் ஆப்பரேஷன் சிந்தூர் எடுத்துரைத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு தளவாடங்கள் இதில் முக்கியப் பங்கு வகித்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம், வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை இந்தியா பெற்றதாகவும் அவர் கூறியுள்ளார்.

தீவிரவாதத்தையும், தீவிரவாத முகாம்களையும் வேரோடு அழிக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி, பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாதுகாப்பு படையினரின் துணிச்சலையும், தியாகத்தையும் போற்றுவதாக கூறியுள்ளார்.

நவீன ராணுவ நடவடிக்கைகளுக்கான எடுத்துக்காட்டாக ஆப்பரேஷன் சிந்தூர் திகழ்ந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு துறையில் விரைவில் சுயசார்பினை எட்ட வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவும் இந்நாளையொட்டி, பாதுகாப்பு படையினருக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

அஞ்சல் துறையை நவீனமயமாக்குவதற்கான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் புனரமைக்கப்பட்ட *Nehru Place* அஞ்சல் அலுவலகத்தை தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தாவுடன் இணைந்து திறந்து வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மக்கள் உணர்வுகளை கொண்டு செல்லும் அஞ்சல் துறையை நவீனமயமாக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன் அடிப்படையில் அஞ்சலகங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

தொழிலாளர்கள் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் 40வயதுக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வருடந்தோறும் இலவச உடல் பரிசோதனை செய்து கொள்வதற்கான தேசிய இயக்கத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

தொழிலாளர்களின் நலனுக்காக கடந்த 12 ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

மத்திய அரசு மேற்கொண்டநடவடிக்கைகள் காரணமாக, வேலைவாய்ப்பின்மை 3 புள்ளி இரண்டு சதவீதம் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு மட்டுமின்றி, தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்வதிலும் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

>>>>>>><<<<<<<

மேற்குவங்கத்தில் அரசியல் வன்முறைகள் நடைபெறுவத ஏற்புடையதல்ல என்று மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. சுவேந்து அதிகாரி-யின் உதவியாளர் சந்திரநாத் ராத் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் வன்முறை கலாச்சாரத்திற்கு ஊக்கமளித்து வருவதாகவும் அவர் குறை கூறினார்.

இந்த கொலை சம்பவத்திற்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

உத்தரபிரதேச அரசு மாற்றுத் திறனாளிகளின் நலனில் அக்கறையுடன் செயல்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

லக்னோவில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்கு தேர்வு செய்யப்பட்ட ஊழியர்களுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கி அவர் பேசினார்.

உத்தரபிரதேச பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 202 பேருக்கு இன்று பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திறன் மேம்பாட்டிற்கும் தமது அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக திரு. யோகி ஆதித்யநாத் கூறினார்.

>>>>>>><<<<<<<

பீகார் அமைச்சரவை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பாட்னாவின் காந்தி மைதானத்தில் தற்போது நடைபெற்று வரும் நிகழ்ச்சியில் புதிய அமைச்சர்கள் பதவியேற்று வருகின்றனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்பட பலர் இதில் பங்கேற்றுள்ளனர்.

>>>>>>><<<<<<<

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு, நான்கு நாட்கள் ஆகியும், புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகளில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த தேர்தலில் 108 இடங்களில் வெற்றிபெற்ற த.வெ.க. தலைவர் திரு. விஜய், மாநில ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை நேற்று சந்தித்து, ஆட்சியமைக்க உரிமை கோரினார்.

காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்கள் 5 பேர் தமக்கு ஆதரவு அளித்துள்ளதையும் அவர் ஆளுநரிடம் எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து, இரண்டாவது நாளாக இன்று ஆளுநரை சந்தித்து திரு. விஜய் பேசினார்.

இதற்கிடையே, சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு. தொல் திருமாவளவன், தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள த.வெ.க-வை ஆட்சியமைக்க அழைப்பு விடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

த.வெ.க-விற்கு தமது கட்சி ஆதரவளிப்பது குறித்து ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியனும், இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், த.வெ.க. தனது பெரும்பான்மையை சட்டப்பேரவையில் நிரூபிக்க ஆளுநர், அரசியலமைப்பு சட்டத்தின்படி அவகாசம் தர வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

இருப்பினும், தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள த.வெக.விடம் பெரும்பான்மைக்கான இதர கட்சிகளின் ஆதரவு கடிதங்களை ஆளுநர் கேட்பதற்கு அதிகாரம் உள்ளதாக திமுக செய்தி தொடர்பாளர் திரு. சரவணன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், உச்சநீதிமன்ற தீர்ப்புகளை சுட்டிக்காட்டி இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

>>>>>>><<<<<<<

கேரளத்தில் புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகளில் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது.

140 உறுப்பினர்களை கொண்ட கேரள சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி 102 தொகுதிகளில் வெற்றிபெற்றது.

புதிய அரசு அமைப்பது தொடர்பாக கூட்டணி கட்சிகளுடன் காங்கிரஸ் தொடர்ந்து ஆலோசனைகளை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தமிழக ஆளுநராகவும் பொறுப்பு வகிக்கும் கேரள ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் சென்னையிலிருந்து திருவனந்தபுரம் திரும்பியவுடன், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி புதிய அரசு அமைப்பதற்கு உரிமை கோரவுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>>><<<<<<<

ஆந்திராவில் மாவட்ட ஆட்சியர்களின் இரண்டு நாள் மாநாடு, முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு தலைமையில் இன்று தொடங்கியது.

அமராவதியில் நடைபெற்று வரும் இந்த மாநாட்டில், அரசின் சேவைகளை மேம்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சட்டம் ஒழுங்கு சூழல் குறித்தும் இதில் விரிவாக ஆலோசிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>>><<<<<<<

உத்தரபிரதேசத்தில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த 6 பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

Hamirpur மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள யமுனை ஆற்றில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் சிக்கியவர்களில் 3 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

>>>>>>><<<<<<<

வியட்நாம் அதிபர் திரு. To Lam மும்பை பங்குச் சந்தையை இன்று பார்வையிட்டார்.

அங்கு நடைபெறும் பங்கு பரிமாற்றம் குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து இன்று பிற்பகல் மஹாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸையும் திரு. To Lam சந்தித்து பேசவுள்ளார்.

>>>>>>><<<<<<<

பங்களாதேஷ் உடனான வர்த்தக உறவுகள் மேலும் வலுப்படுத்தப்படும் என்று சீனா கூறியுள்ளது.

அரசுமுறைப் பயணமாக பெய்ஜிங் சென்றுள்ள பங்களாதேஷ் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Khalilur Rahman-னுடன் நடத்திய பேச்சுகளுக்குப் பின்னர், சீன வெளியுறவு அமைச்சர் திரு. Wang Yi இதனை தெரிவித்தார்.

பங்களாதேஷின் பொருளாதார மற்றும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான உதவிகளை சீனா வழங்கும் என்று திரு. Wang Yi கூறினார்.

>>>>>>><<<<<<<

உலக கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா மகளிர் குழுப் பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

சீனாவின் Shanghai-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் இப்பிரிவிற்கான அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா - கொரியாவை வென்றது.

மகளிர் தனிநபர் பிரிவுகளில் Ankita Bhakat, Kumkum Anil Mohod மற்றும் Simranjit Kaur காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>>><<<<<<<

தாஷ்கண்ட் கிராண்ட்பிரி சைக்கிள் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஆடவர் குழுப் பிரிவில் இந்தியாவிற்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

ஆடவர் தனிநபர் பிரிவில், Harshveer Sekhon வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>>><<<<<<<

மெக்ஸிகோவில் நடைபெற்று வரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் *Shriyanshi Valishetty* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-7, 21-10 என்ற செட்கணக்கில் மெக்ஸிகோவின் *Vanessa Karmine*-ஐ வென்றார்.

>>>>>>><<<<<<<

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 18 வயதுக்குட்பட்டோருக்கான, ஹாக்கிப் போட்டி தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<